# தமிழ் அகதிகளை திருப்பி அனுப்ப வேண்டாம்

யாழ்ப்பாணம்

விலை ரூபா 5.00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 மாசி 30 இதழ் 32
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 13 – 03 – 1992

## கருணாநிதி கோரிக்கை

(சென்னை)

''இலங்கைத் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்ப வேண்டாமென தி.மு.க. தலைவர் திரு. மு. கருணாநிதி கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்: தமிழர் பிரதேசங்களில் சிங்களப்படைகள் தாக்குதலை நடா

(4-ம் பக்கம் பார்க்க)

## விமான இரைச்சலே கொழும்பில் பேரொலி?

(கொழும்பு)

கொழும்பில் நேற்று முன் தினம் ஏற்பட்ட பரபரப் பிற்கு இலங்கை புதிதாக கொள்முதல் செய்தசீனயுத்த விமானமே காரணமென விமானப்படைவிங்கமாண்டர்

(4-ம் பக்கம் பார்க்க)

## 'பிரபா' ஒரு மாய மனிதன் இலங்கைத்தூதர் வியப்பு

(புதுடில்லி)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே. பிரபாகரன் ஒரு மாய மனிதனாக இருக்கிறார் என்று இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் திரு. நெவில் கனகரத்ன தெரி

(4-ம் பக்கம் பார்க்க)

## மேலதிக படையினர் குவிப்பு!

# கொழும்புநகரில் தீவிரமான பாதுகாப்பு நடவடிக்கைகள்!

## உயர் பொலிஸ் குழு அவசர மாநாடு

(கொழும்பு)

**கொழும்பு நகரில் நேற்று முதல் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டு வருகின்றன. நகருக்குள் பிரவேசிக்கும் பொதுமக்கள் மற்றும் வாகனங்கள்மீது தீவிர சோதனை நடத்துவதற்கு பொலிசாருக்கும், பாதுகாப்புப் படையினருக்கும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது**

கொழும்பு நகருக்குள் மேலதிக பொலிசாரும், ஆயுதப் படையினரும் பணிக்காக அமர்த்தப்பட்டுள்ளதுடன் நகருக்கு வரும் பொதுமக்களை அடையாள அட்டைகளுடன் வருமாறு கேட்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புப் படையினரின் சோதனையின்போது தமது அடையாளங்களை நிரூபிக்காத சந்தேகத்திற்கிடமானோர் தடுத்துவைக்கப்படவுள்ளார்கள்.

இதேவேளை நேற்று உயர் பொலிஸ் அதிகாரிகள் குழு ஒன்று அவசர அவசரமாக

(4-ம் பக்கம் பார்க்க)

## பிரபாவை ஒப்படைக்க இந்தியா கோரவில்லை

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரனை ஒப்படைக்குப்படி இந்திய அரசு இலங்கையிடம் கோரவில்லையென 'டெய்லி நியூஸ்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

அச்செய்தி மேலும் தெரிவிக்கையில்; இவ்வாறு இந்தியா கோருமானால் அதற்கு சட்ட ஏற்பாடுகள் எதுவும் இல்லை.

நபர் ஒப்படைப்பு சம்பந்தமாக வெளிநாடுகேட்குபட்சத்தில் சட்ட அதிகாரிகள் அதுபற்றி விசாரித்து அறிவிக்க வேண்டும். மேலும் இலங்கை நீதிமன்றில்வழக்குதாக்கல் செய்ய வேண்டும். (மா-சி)

## பேசாலை முகாமில் 9 தமிழ் இளைஞர்கள் கைது

(கொழும்பு)

மன்னார் பேசாலை அகதி முகாமில் இராணுவத்தினரால் ஒன்பது தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

இம்முகாமில் அண்மையில் நடத்திய தேடுதலின்போதே

(4-ம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு எதிராக பிரசாரம் முறியடிக்குமாறு உத்தரவு

(கொழும்பு)

இலங்கைக்குஎதிராக வெளிநாடுகளில் பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவது குறித்து இலங்கை அரசு கவலையடைந்துள்ளது,

இலங்கையில் தமிழ்மக்களுக்கு எதிராக கடந்த பல வருடங்களாக மேற்கொள்ளப்பட்டுவரும் அடக்குமுறைகள், கொடுமைகள் பற்றியும், தென்பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் மனித உரிமை மீறல்கள் குறித்துமே இப்பிரசாரம்மேற்

(4-ம் பக்கம் பார்க்க)

## புலிகளுடன் பேசுவது குறித்து அரசின் முடிவு வெளியாகவில்லை

### அமைச்சர் ஹேரத் தகவல்

(கொழும்பு)

''சமாதானப் பேச்சுப் பற்றிய நிலையை இலங்கை அரசு இன்னமும் வெளிப்படுத்தவில்லை. சென்னையில் இலங்கைத் தூதுவர் வெளியிட்ட கருத்து அவரது சொந்தக் கருத்தேயாகும்.''

இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் ஹரோல்ட் ஹேரத் கொழும்பில் தெரிவித்துள்ளார்.

சமாதானம் ஏற்பட வேண்டுமாயின் விடுதலைப்புலிகளுடனேயே பேசவேண்டும் என்றும், தற்போது அரசினால் விதிக்கப்பட்டிருக்கும் நிபந்தனைகள் தளர்த்தப்படும் என்றும் சென்னையில் இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் டாக்டர் நெவில் கனகரத்தின தெரிவித்திருந்த கருத்து குறித்தே அமைச்

(4-ம் பக்கம் பார்க்க)

## 30 மீற்.தூரத்தில் மோதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சித்தாண்டிப் பகுதியில் விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்தினருக்குமிடையே மோதல் இடம்பெற்றது.

நேற்று முன்தினம் ரோந்து வந்த இராணுவத்தினருக்கும் புலிகளுக்குமிடையில் 30 மீற்றர் தூரத்தில் இந்தமோதல் இடம்பெற்றதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

## தெரிவுக் குழுவின் விசாரணை நாளை மறுதினம் முடிவடைகிறது

(கொழும்பு)

எதிர்வரும் தமிழ், சிங்கள புதுவருட ஆரம்பத்தில், வடக்கு – கிழக்கு பிரச்னை தொடர்பான நாடாளுமன்ற தெரிவுக்குழுவின்அறிக்கையும் சிபார்சுகளும், நாடாளுமன்ற சபாநாயகரிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

இம்மாதம் 15ம் திகதிக்கு பின்னர் இக்குழு முன்னிலையில் சாட்சியமளிக்க முடியாது. அறிக்கை தயாரிப்பு வேலைகள் இம்மாத இறுதிக்குள் ஆரம்பமாகும்.

சுமார் ஒருமாத காலத்தினுள் அறிக்கை பூர்த்திசெய்யப்பட்டு ஏப்பிரல் புதுவருடத்தையொட்டி பூரண அறிக்கைகளும் சிபார்சுகளும் பாராளுமன்றுக்கு விடும் பொருட்டு சபாநாயகரிடம் சமர்ப்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (கே)

## கொழும்பு-வெரகறவில் குண்டு செயலிழப்பு

(கொழும்பு)

கொழும்பு வெரகர இ.போ.ச. வேலைத் தளத்தில் வைக்கப்பட்ட சக்தி வாய்ந்த குண்டுகள் செயலிழக்கச் செய்யப்பட்டபோதே கொழுப்பு நகரில் இரு பேரொலிகள் கேட்டதாக நேற்றைய கொழும்புப் பத்திரிகைகள் சில செய்தி வெளியிட்டுள்ளன.

இ. போ. சபையில் குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து அங்கு வந்த குண்டு நிபுணர்கள் இதனை செயலிழக்கச் செய்தபோதே இவ் வெடிச்சத்தங்கள் கேட்டதாம்.

(4-ம் பக்கம் பார்க்க)

## திருவடிநிலை கடலில் படையினர் குவிப்பு

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் திருவடிநிலை கடல் பிராந்தியத்தில் 50க்கும் மேற்பட்ட கடற்படை விசைப் படகுகள் தரித்து நிற்பதைக் காணக்கூடியதாயுள்ளதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இப்படகுகள் நேற்று முன் தினமிரவு முதல் திருவடிநிலைப் பகுதியிலிருந்து காங்கேசன்துறை கடல் பிராந்தியம் வரை தரித்து நிற்பதாகவும் கூறப்படுகின்றது. (வி)

## தெரிவுக்குழுவின் முடிவு பிரச்னையைத் தீர்க்குமா?

(கொழும்பு)

நாடாளுமன்ற தெரிவுக் குழுவின் இறுதி முடிவு இனப்பிரச்னையை தீர்க்குமா என்ற கேள்வி தற்போது பரவலாக எழுந்துள்ளது.

நாடாளுமன்றதெரிவுக் குழுவின் முடிவு தமிழர் பிரச்னையை தீர்க்கும் திட்டத்தை ஓரளவேனும் கொண்டிருக்குமா, அல்லது இதனை விடுதலைப்புலிகள் ஏற்கக் கூடியதொரு நிலை தென்படுமா என்பது தெரியாமல் நாடாளுமன்றில் முடிவு சமர்ப்பிக்கப்

(4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

ரான்சிஸ்ரர்கள், I C கள், டயோட், பற்றி சார்சர்கள் மலிவுவிலையில் விற்கப்படுகின்றன. Jaffna Technicai Institute ஸ்ரான்லி வீதி, (றெயில்வேகடவையருகாமை) யாழ்ப்பாணம், (எ–1983)

### வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், வலிப்புநோய், பீனிசம், தலையிடி, தலைக்காலவியல், சருமநோய்கள், மாதவிடாய் குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, மூலவியாதிகள், மூத்திரரோகங்கள், பிரபலமானவர் சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர். வேலணை வைத்தியர் சி.இராசரத்தினம், 121, 2–ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (சி–6030)

### சிறுகதை எழுத

''சிறுகதை எழுதுவோர்க்கு எனது பட்டறிவுக் குறிப்புகள்'' — வரதர் எழுதியது. ரூபா 18. எல்லா புத்தகசாலைகளிலும் கிடைக்கும். ஆனந்தா புத்தகசாலை, 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி-6055)


## சைக்கிள் இலக்கத் தகடு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபையில் சைக்கிள்உரிமையாளர்களுக்கு 1992–க்கான சைக்கிள் இலக்கத் தகடுகள்வழங்கப்பட்டுவருகின்றன.

இந்தத் தகடு இலக்கங்களை நல்லூர் பிரதேச சபையின் திருநெல்வேலி அலுவலகத்திலும்நல்லூர் பிரதேசசபையின் கொக்குவில் உபஅலுவலகத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

1992க்கான பற்றுச்சீட்டை மாத்திரம் முன்பு பெற்றவர்கள் அதனை அலுவலகத்தில் காண்பித்து தங்கள் இலக்கத் தகடுகளைப் பெற்றுக்கொள்ளுமாறு நல்லூர் பிரதேச சபையினர் தெரிவித்துள்ளனர்.

## ஆதனங்கள் வரி மதிப்பீடு

(கொழும்புத்துறை)

யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட ஆதனங்களின் வரி மதிப்பீட்டு வேலைகளை யாழ். மாவட்ட விலை மதிப்பீட்டு திணைக்களம் துரிதமாக மேற்கொண்டுவருகின்றது.

தற்போதைய இந்த நெருக்கடியான சூழ்நிலையிலும் விலை மதிப்பீட்டுத் திணைக்களம் யாழ்.மாநகர வரி மதிப்பீட்டு வேலையின் 75 வீதத்தைப் பூர்த்திசெய்துள்ளது. (154)

## நாற்பது தம்பதிகளுக்கு திருமணப் பதிவு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டப்பதிவாளர் அலுவலகத்தில் திருமணப் பதிவு வைபவங்கள் நடைபெற ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளதாக மாவட்ட மேலதிக பெரும்பகுதி பதிவாளரும் காணிப் பதிவாளருமான திரு. கே. சதாசிவஐயர் தெரிவித்தார்.

இராமநாதபுரம் பகுதியில் உள்ள சம்புக்குளம் கிராமத்தில் திருமணப் பதிவு மேற்கொள்ளாமல் இருந்த சுமார் நாற்பது தம்பதிகளுக்கு சுற்றுலா பதிவாளர் அலுவலகம் ஒன்றை ஆரம்பித்து திருமணப் பதிவை நிறைவேற்றி வைத்ததாகவும் அவர் கூறினார்.

பொன்னகர் கிராமத்திலும் சுற்றுலா பதிவாளர் அலுவலகம் மூலம் திருமணப் பதிவு செய்யாதோருக்கு திருமணப் பதிவை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் கூறினார். (83)

## கைத்தறி நெசவு நிலையங்களை இயக்கச்செய்ய ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள ப. நோ. கூ. சங்கங்களின் கீழ் கடந்த காலங்களில் இயக்கி வந்த கைத்தறி நெசவு நிலையங்களை மீண்டும் இயங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன.

இது சம்பந்தமாக ஆலோசனைகளை நடாத்துவதற்காக ப. நோ. கூ. சங்கங்களின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவொன்று இன்று வெள்ளிக்கிழமை யாழ். அரச அதிபரை சந்திக்கவுள்ளது.

மேற்படி கைத்தறி நிலையங்களை மீண்டும் இயங்க வைப்பதற்கு வேண்டிய மூலப் பொருட்கள் பற்றியும், எரிபொருட்கள் பற்றியும் யாழ். அரச அதிபரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட இருப்பதாகவும் கூறப்படுகிறது. [வி]

## அவசர தேவைக்கு பிறப்புச் சான்றிதழ்

(புலோலி)

பருத்தித்துறை மாவட்ட பெரும்பாக பிறப்பு, இறப்பு காணிப்பதிவகத்தில் அவசர தேவைகளுக்கு பிறப்புச்சான்றிதழ் பத்திரங்கள் வழங்கப்படுகிறது.

கடவுச்சீட்டு தவிர ஏனைய அவசிய அவசரதேவைகளுக்கு விண்ணப்பித்தோருக்கு பிறப்புச் சான்றுப்பத்திரங்கள்வழங்கப்படுவதாக பருத்தித்துறை மாவட்ட பிறப்பு, இறப்பு காணிப்பதிவாளர் திரு கே, மாணிக்கவாசகர் தெரிவித்தார். (61]

## கிழக்கு ஆஸ்பத்திரிகளுக்கு பத்து அம்புலன்ஸ்

(கொழும்பு)

கிழக்கு மாகாண ஆஸ்பத்திரிகளுக்கு 10 அம்புலன்ஸ்வண்டிகள் வழங்கப்படவிருப்பதாக சுகாதார மகளிர் விவகார அமைச்சர் ரேணுகா ஹேரத் தெரிவித்துள்ளார்,

பொத்துவில், கல்முனை, வாழைச்சேனை, அம்பாறை, கல் அமுனு, சம்மாந்துறை, லபுகல, திருகோணமலை, திருக்கோவில் மற்றும் மன்னார் ஆகிய இடங்களிலுள்ள ஆஸ்பத்திரிகளுக்கே இவ் அம்புலன்ஸ் வண்டிகள் வழங்கப்படவுள்ளதாகவும், அம்புலன்ஸ் வண்டிகளின் பெறுமதி 15 கோடி ரூபா எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் அம்புலன்ஸ் வண்டிகளை 'யுனிசெப்' நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்றும் தெரிவித்தார். (க)

## சுகாதார காப்புறுதி திட்டம்

(கொழும்பு)

அரச ஊழியர் சுகாதார காப்புறுதித் திட்டத்தை மேலும் விஸ்தரிப்பதற்கு இலங்கை காப்புறுதிக்கூட்டுத்தாபனம் ஒழுங்குகளைச்செய்துள்ளது.

ஏற்கனவே உள்ள சத்திர சிகிச்சைகளுக்கான செலவுகளுடன் வைத்திய செலவுகளையும் அளிப்பதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது என கூட்டுத்தாபனத்தில் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## சுகாதார பராமரிப்பு பயிற்சி

(யாழ்ப்பாணம்)

'யுனிசெவ்' உதவியுடன் யாழ், மாநசராட்சி மன்றப் பிரதேசத்திலுள்ள பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்காக ஆரம்ப சுகாதார பராமரிப்புப் பயிற்சி ஒழுங்கு செய்யப்படவுள்ளது.

இப்பயிற்சியில் கலந்து கொள்ளவிரும்பும் பாலர்பாடசாலை ஆசிரியர்கள் யாழ். மாநகராட்சி மன்ற 'யுனிசெவ்' பகுதியுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு தொழில் வழங்க முயற்சி

(யாழ்ப்பாணம்)

கடற்றொழில் துறையை அபிவிருத்தி செய்வதுதொடர்பான கருத்தரங்கு ஒன்று யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் திரு. அ. துரைராசா தலைமையில் நடைபெற்றது. தமிழீழ ஆய்வு நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இக்கருத்தரங்கில் கடற்றொழில் துறையை அபிவிருத்தி செய்வது சம்பந்தமான கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

இக்கருத்தரங்கில் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக தொழில் வாய்ப்புகளை இழந்த கடற்றொழிலாளர்களை நாச்சிக்குடாப்பகுதியில் குடியமர்த்தி, அவர்களை மீண்டும்தொழிலில் ஈடுபடச்செய்ய முயற்சிப்பதெனவும், தற்போதைய நிலையில் கரையோர மீன்பிடிப்பே சாத்தியப்படுவதினால் அதை ஊக்குவிப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்வது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடற்றொழிலாளர்களுக்கு வேண்டிய கட்டுமரங்களை உள்ளூரிலேயே தயாரிப்பது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது. இதுவரைகாலமும் கட்டுமரங்கள் தயாரிப்பதற்காக அல்வீசியா, மலைவேம்பு போன்ற மரங்கள் கண்டிப் பகுதியிலிருந்தே பெறப்பட்டு வந்தன. இன்றைய சூழ்நிலையில் இது சாத்தியப்படாததால், கிளிநொச்சிப்பகுதியிலிருந்து இலவம் பஞ்சு மரங்களைப்பெற்று கட்டுமரங்களைத் தயாரிப்பதற்கும், கட்டுமரம் தயாரித்தல் மூலம் பெற்றுக்கொள்ளப்படும் வருமானத்தை வனபரிபாலனத்திற்குப் பயன்படுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாச்சிக்குடாப்பகுதியில் பிடிக்கப்படும் மீன்களை உடனடியாகச் சந்தைப்படுத்துவதில் போக்குவரத்துப் பிரச்னைகள் காணப்படுவதால் மீன்களைப் பதப்படுத்தி விநியோகம் செய்வதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது,

## தமிழ் மொழித் தினப் போட்டி

(வட்டுக்கோட்டை)

யாழ்ப்பாணம் கல்விக் கோட்டப் பிரிவுப் பாடசாலை மாணவர்களுக்கிடையேயான தமிழ் மொழித்தினப் போட்டிகள் இம்மாதம் 20ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8–30 மணி முதல் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. வேலாயுதம் தலைமையில் புடைபெறவுள்ளன.

யாழ். கல்விக்கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் இப்போட்டிகளுக்கான சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றார். (139)

## பொதுக்கூட்டம்

(உடுவில்)

வடமாகாண ஆசிரியர் சங்க சகாய நிதியினரின் முப்பத்திரண்டாவது வருடாந்தப் பொதுக்கூட்டம் இம்மாதம் 15ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9–30 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். (109)

## கோழிகளுக்கு நோய் தடுப்பூசி

(உடுவில்)

வலிகாமம் வடக்கு, வலிகாமம் தெற்கு பகுதிகளில் கோழிகளுக்கு புதுவகை தூக்கநோய் பரவிவருகின்றது. இந்நோயினால் பீடிக்கப்பட்ட கோழிகள் ஓரிரு நாட்களில் இறந்துவிடுகின்றன. இந்நோயைக் கட்டுப்படுத்த தெல்லிப்பளை கால்நடைவளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தினூடாக கோழிநோய் தடுப்பூசிகள் போடப்பட்டுவருகின்றது.

## இன்று

(உடுவில்)

சண்டிலிப்பாய் அ. மி. த. க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர்போட்டி இன்று 13ம் திகதி பிற்பகல் 1-30 மணிக்கு அதிபர் த. நடராசா தலைமையில் நடைபெற உள்ளது. மருதனார்மட கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (109)


# கம்பியூட்டர் கல்வி

- BASIC
- d BASE
- LOTUS 1 - 2 - 3
- WORD STAR 2000+

**புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன**

யாழ்., வடமராட்சியில்:-

16—03—92 (திங்கள், புதன், வெள்ளி)

21—03—92 (சனி, ஞாயிறு)

யுனிக்கோ கம்பியூட்டர் சென்ரர், இல. 37, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

சதா பொன்ஸ், அல்வாய் கிழக்கு, அல்வாய்.

(ஏ–1980)

# தொழிற் பயிற்சிகள்

**எந்த நாடுகளிலும் இலகுவாக தொழில் வாய்ப்புப் பெற அரிய சந்தர்ப்பம்**

★ றேடியோ, ரெலிவிசன், வீடியோ டெக் றிப்பியறிங்
சகல இன றேடியோ. ரெலிவிசன், வீடியோ டெக் திருத்துதல் ஆரம்பத்தில் இருந்து பயிற்சியளிக்கப்படும்.
காலம்; 4 மாதம்.

★ றீவைண்டிங்:
மின்மோட்டர், ரான்ஸ்போமர், டைனமோ மற்றும் எலக்ரிக்கல் உபகரணங்கள் றீவைண்டிங் செய்தல் பயிற்சியளிக்கப்படுகின்றன.
காலம்: 4 மாதம்.

★ எலக்ரிக்கல் வயறிங்:
வீட்டு மின்சார வேலை, மின்சார பொருட்கள் திருத்துதல் பயிற்சியளிக்கப்படுகின்றன.
காலம்: 2 மாதம்.

★ மோட்ட பைசிக்கிள் மெக்கானிசம், நீர் இறைக்கும் இயந்திரம், மோட்டார் பைசிக்கிள் திருத்துதல் ஆரம்பம் முதல் பயிற்சியளிக்கப்படும்.
காலம்:- 4 மாதம்.

★ SPOKEN ENGLISH

பயிற்சிகள் ஆரம்பம்:

18—03—92 (கிழமை)

21—03—92 (சனி, ஞாயிறு)

**JAFFNA TECHNICAL INSTITUTE**

ஸ்ரான்லி வீதி (றெயில்வே கடவை அருகாமை)

யாழ்ப்பாணம்.

(எ–1982)

# தமிழ் மக்களை சிறுபான்மையினராக்க இலங்கை அரசு இனரீதியாக மாவட்டங்களை மீளாய்வு செய்தது

பிரிட்டிஷ் அரசினால் நிர்வாக நோக்கங்களுக்காக இலங்கையில் உள்ள மாவட்டங்களை மீளாய்வு செய்தார்கள். ஆனால் இலங்கைச் சுதந்திரம் பெற்ற பின்பு ஸ்ரீலங்கா அரசு இனரீதியாக மாவட்டங்களின் எல்லைகளை மாற்றி அமைத்து அந்தந்தப் பிரதேசங்களில் வாழும் தமிழ் மக்களை சிறுபான்மையினராக ஆக்க முயன்று வருகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தோடு இணைந்திருந்த பாணமைப் பற்று. அக்கரைப்பற்று கரவாகும் நிந்தாவூர் பற்று, சம்மாந்துறைபற்று, வேவகம் பற்று மற்றும் பிந்தனைப் பற்றில் ஒரு பகுதியும் சேர்த்து 1961-ம் ஆண்டு அம்பாறை மாவட்டம் உருவாக்கப்பட்டது.

இது இலங்கை அரசாங்கம் புதிதாக குடியேற்றத் திட்டங்கள் ஏற்படுத்தியதாலும் தமிழ் மக்கள் வாழும் பகுதிகளை சிங்கள மக்களின் நிர்வாகப்பகுதியோடு சேர்க்கப்படுவதாலும் சொந்த இடங்களில் தமிழினம் சிறுபான்மையினர் ஆக்கும் முதல் முயற்சியாக கருதப்படுகிறது.

பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் இலங்கை நிர்வாக நோக்கங்களுக்காக 01 - 10 - 1833ம் ஆண்டு ஐந்து மாகாணங்களாக எல்லை வகுக்கப்பட்டிருந்தது.

இவை வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு மத்திய மாகாணங்கள் எனப் பெயரிடப்பட்டது.

வடமாகாணத்தோடு இணைந்திருந்த நுவரகலவிய (தற்போதைய அனுராதபுர மாவட்டம்) கிழக்கு மாகாணத்திலிருந்த தம்பன்கடுவ ஆகிய பகுதிகளை சேர்த்து வடமத்திய மாகாணம் உருவாக்கப்பட்டது. இது 1873 ம் ஆண்டு செப்டம்பர் 6-ம் திகதி உருவாக்கப்பட்டது.

1879-ம் ஆண்டு குடிசனத்தொகை மதிபபின் பிரகாரம் வவுனியா மாவட்டம் ஏற்படுத்தப்பட்டது. இந்தக் காலத்தில் இலங்கையில் 21 மாவட்டங்கள் செயற்பட்டன: 1898-ல் மீண்டும் வவுனியா மாவட்டம் நீக்கப்பட்டு எல்லைகள் மாற்றியமைக்கப்பட்டன.

இவ்வாறு மாற்றி அமைக்கும் வேளையில் துணுக்காய் பிரிவு முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டு யாழ்ப்பாண மாவட்டத்தோடு சேர்க்கப்பட்டது.

வவுனியா மாவட்டத்தின் பனங்காமப்பிரிவு மன்னார் மாவட்டத்தின் மாந்தைப் பிரிவோடு சேர்க்கப்பட்டது.

1938-ம் ஆண்டு முல்லைத்தீவு மாவட்டத்தின் செயலகம் வவுனியா பிரிவுக்கு மாற்றப்பட்டு அதைத் தொடர்ந்து முல்லைத்தீவு மாவட்டம் என்ற பெயர் நீக்கப்பட்டது.

1978-ம் ஆண்டு மீண்டும் முல்லைத்தீவு மாவட்டம் ஏற்படுத்தப்பட்டது. இம்மாவட்டம் வவுனியா மாவட்டத்தின் கரைதுறைபற்று புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவு, மன்னார் மாவட்டத்தின் மாந்தை கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு யாழ்ப்பாண மாவட்டத்தின் துணுக்காய் அரசாங்க அதிபர் பிரிவையும் ஒன்று சேர்த்ததின் மூலம் இம்மாவட்டம் உருவாக்கப்பட்டது.

இந்தக்காலத்தில் தான் அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களின் எல்லைகள் மீளாய்வு செய்யப்பட்டன.

திருகோணமலை மாவட்டத்தின் குச்சவெளி அரசாங்க அதிபர் பிரிவின் தென்னைமரவடி, புல்மோட்டை கிராம சேவகர் பிரிவுகளும். 1972 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் அனுராதபுர மாவட்டத்தோடு இணைக்கப்பட்டது. பின் இப்பிரிவுகள் 1982-ம் ஆண்டு மே மாதம் 13-ம் திகதி மீண்டும் திருகோணமலையோடு இணைக்கப்பட்டது. இதன் பின்பு கிளிநொச்சி மாவட்டமும் உருவாக்கப்பட்டது.

வவுனியா மாவட்டத்தில் இருந்த மூன்று உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளை அனுராதபுர மாவட்டத்தோடு இணைத்து லவுனியா மாவட்டத்தில் தமிழ் மக்களை சிறுபான்மையினராக ஆக்க முயற்சித்த போது பலத்த எதிர்ப்பின் காரணமாக இந்த முயற்சி கைவிடப்பட்டது. (152)

## இராசி பலன்

13 03 1992
வெள்ளிக்கிழமை
(தமிழீழுக்கு மாசி 30)

நவமி பி. ப. 1-54 வரை, திருவாதிரை மாலை6-23வரை, இராகு காலம் காலை 10-52 முதல்12-22 வரை, சுபநேரம் காலை 6-22 முதல் 7-52 வரை.

மேடம்: பந்து சந்தோசம், சத்துரு ஜயம், தனவரவு.

இடபம்: தாழ்மை நிலை, தேசசஞ்சாரம், குடும்பபகை.

மிதுனம்: வழிநடத்தல், மனத்தைரியம், வெற்றி.

கடகம்: வாக்குப்பலம், தொழில் முடக்கம், செலவு.

சிங்கம்: ஸ்திரி உபதேசம், மரியாதை, காரியசித்தி.

கன்னி: விதண்டாவாதம், தப்பபிப்பிராயம், மறதி.

துலாம்: குடும்பப்பிரிவு, கருத்துவேற்றுமை, அலைச்சல்.

விருச்சிகம்: தொழில் கஷ்டம். ஆணவப்போக்கு, சஞ்சலம்.

தனுசு: காரியஜயம், அதிக யோசனை, வாக்குவன்மை.

மகரம்: பெரியோர் அறிவுரை, தொழில்லாபம், கடன் வரவு.

கும்பம்: தொழில் பாதிப்பு, இடையூறு, வியாதி சோகம்.

மீனம்: முழங்கால் வலி, மனப்போராட்டம், காரியத் தடை.

- ஜோஸ்யர்

## மேதின விழாவில் சீனக் கலைஞர்கள்

(கொழும்பு)

இம்முறைகொழும்பில்நடைபெறவுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் மேதினவிழாவில் சீனக் கலைஞர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

வழமைபோல் இம்முறையும் மேதின விழாவை காலிமுகத் திடலில் ஐ. தே. க. நடத்தவுள்ளது. (கே)

## ஷெல் தாக்குதலை எதிர்த்து மீண்டும் ஊர்வலம் நடத்த முயற்சி

(சித்தன்கேணி)

அராலியில்உள்ள குடியிருப்புக்கள் மீது தொடர்ந்து மேற்கொள்ளப்படும் ஷெல் தாக்குதலைக்கண்டித்துமீண்டும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அரசாங்க அதிபர், செஞ்சிலுவைச்சங்கப் பிரதிநிதி ஆகியோரின் அலுவலகங்களிற்கு முன்பு மறியல் போராட்டம் நடத்துவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. (137)

## மாணவர்களுக்கு கொப்பி, பேனை அன்பளிப்பு

(உடுவில்)

நவாலியில் உள்ள முதலியார் மகேசன் விடுதியில் தங்கியுள்ள மாணவர்களுக்கு கல்வி மேம்பாட்டை கருத்தில் கொண்டு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி லியோ கழகத்தினர் உதவிகளை வழங்கி உள்ளனர்.

பாடசாலைக் கல்விக்கு தேவையான கொப்பிகள். பென்சில்கள். பேனைக்கள் மற்றும் முதலுதவிக்குரிய மருந்துப் பெட்டிகள் போன்ற பொருட்களை அன்பளிப்பாக வழங்கி உள்ளனர். (109)

## இலவச பாடநூல்

(புலோலி)

வடமராட்சிப் பகுதியில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு இலவச பாட நூல்கள் வழங்கப்பட்டன.

வடமராட்சி கோட்டக் கல்வி அலுவலகத்தினால் கொத்தணிகள் ஊடாக சகல பாடசாலை மாணவர்களுக்கும் இப்பாடநூல்கள் வழங்கப்பட்டன. (61)

## போலி ஒயில் தயாரிப்பு: மூவர் ஆஸ்பத்திரியில்

(யாழ்ப்பாணம்)

போலி ஓயில் தயாரிப்பில் ஈடுபட்ட மூவர் பலத்த எரிகாயங்களுக்குள்ளாகி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்கள்.

பண்டத்தரிப்பு கிராம்பத்தைப் பகுதியில் சொலிக்கனத்தையும் மண்ணெண்ணையையும் கலந்து போலி ஓயில் தயாரிக்க முற்பட்டபோது திடீரென வெடித்து சிதறியதால் போலித் தயாரிப்பில் ஈடுபட்ட மூவரும் பலத்த எரிகாயங்களுக்குள்ளாகினார்களாம். (வி)

## 'ஒரு சமுதாயத்தை எப்போதும் அடக்கி ஒடுக்கி வைக்க முடியாது"

(கொழும்பு)

"ஒரு சமுதாயத்தை எப்போதுமே அடக்கி ஒடுக்கி வைக்கமுடியாது. ஐக்கிய உணர்வின் மூலமே அபிவிருத்தி நடவடிக்கை துரிதமாகும்",

கொழும்பில் நடைபெற்ற தமிழ் பத்திரிகையாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய தகவல்துறை ராஜாங்க அமைச்சர் ஏ. ஜே. ரணசிங்கா இவ்வாறு தெரிவித்தார்.

சிறுபான்மையினரைபெரும்பான்மையினரும், பெரும்பான்மையினரை சிறுபான்மையினரும் பராமரிக்கவேண்டும்' என்றும் ஒருவரை ஒருவர் மதித்து வாழவேண்டும் என்றும் அப்போதுதான் நாடு அபிவிருத்தி அடையும் என்றும் ராஜாங்க அமைச்சர் மேலும் கூறினார். (கே)

## யுத்தத்தை காரணம் காட்டி வட-கிழக்கில் விளையாட்டுதுறை அரசால் புறக்கணிப்பு!

(யாழ்ப்பாணம்)

"வடக்கு-கிழக்குப் பகுதிகளின் விளையாட்டுத்துறை வளர்ச்சிக்கு அரசு அக்கறை காட்டுவதில்லை. இப்பகுதிகளில் யுத்தம் நடைபெறுகின்றது என்று சமாதானம் கூறிக்கொண்டு இங்கு விளையாட்டு வீரர்களுக்குத் தேவையான விளையாட்டுச்சாதனங்களை அனுப்பி வைப்பதற்கு அரசு தடைவிதித்து வருகின்றது."

இவ்வாறு வடக்கு - கிழக்கு மாகாண சபையின் கல்வி கலாச்சாரவிளையாட்டுத்துறையின் சிரேஷ்ட உத்தியோகஸ்தர் ஒருவர் தெரிவித்தார்.

வடக்கு-கிழக்குப்பகுதிகளில் சகல விளையாட்டுகளும் நடைபெற்றுக்கொண்டே வருகின்றன. அரசுசார்பாக விளையாட்டு அமைச்சினால் நடாத்தப்படும் விளையாட்டுப்போட்டிகளும் இப்பகுதிகளில் தடங்கல்கள்ஏதுமின்றிநடைபெற்று வருகின்றன.

கிழக்கு மாகாணங்களில் இருந்து பல விளையாட்டு வீரர்கள் அண்மையில் நடைபெற்று முடிந்த "சாவ்" விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்களையும் பெற்றுள்ளனர்.

மேற்படி பகுதிகளில் 66 விளையாட்டு உத்தியோகஸ்தர்களுக்குப்பதிலாக 26 உத்தியோகஸ்தர்கள் மட்டுமே கடமையாற்றி வருகின்றனர்.

இவ் வெற்றிடங்கள் நீண்டகாலமாக நிரப்பப்படாமல் இருக்கின்றது. இவற்றை பூர்த்தி செய்யும்படி பல தடவைகள் விளையாட்டு அமைச்சுக்கு சுட்டிக்காட்டியும் அரசு உதாசீனம் செய்து கொண்டே வருகின்றது என்று அந்த உத்தியோகஸ்தர் மேலும் தெரிவித்தார். (வி)

## 10தினங்கள் முத்தமிழ்விழா நடாத்த ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தினர் சென்ற வருடம் யூன் மாதத்தில் நடாத்தியது போன்று இவ்வருடமும் மிகவும் கோலாகலமாக

முத்தமிழ் விழாவினை நடத்துவதற்குரிய ஆயத்தங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

சென்ற வாரம் விடுதலைக் புலிகள் கலை, பண்பாட்டுப் கழகத் தலைமைச் செயலகத்தில் அமைந்துள்ள கேட்போர் கூடத்தில் இதற்கான ஆரம்பக் கூட்டம் இடம் பெற்றபோது, விழாவை சென்ற வருடத்தைவிட மிகவும் சிறப்பாகவும், எழுச்சியாகவும் கொண்டாடுவதன் பொருட்டு விழாக் குழுக்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

தொடர்ந்து தமிழீழத்தின் பல பாகங்களிலும் பத்து நாட்கள் இடம்பெறவிருக்கும் இவ் விழாவில் பட்டிமன்றங்கள், கவியரங்குகள், நடன நிகழ்வுகள், நாட்டிய நாடகங்கள், வில்லுப்பாட்டு, தமிழர்களின் பாரம்பரிய கூத்து வடிவங்கள், நாடகங்கள் என பல சிறப்பு நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

முத்தமிழ் விழாவில் பங்கேற்க விரும்பும் கலைஞர்கள் தங்கள் ஆக்கங்களின் எழுத்துப் பிரதிகளை இம்மாதம் 30ம் திகதிக்கு முன்பதாக 'முத்தமிழ் விழாப் பொறுப்பாளர், தலைமைச் செயலகம், விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக்கழகம், கோண்டாவில்' என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுகொள்ளப்படுகின்றார்கள். (வி)

## தவக்கால நற்சிந்தனை

நாம் இதுவரை செய்த துரோகங்களை எல்லாம் தூர எறிந்து விட்டு, புதிய உள்ளத்தையும் புதிய மனத்தையும் தேடிக் கொள்ள வேண்டும். நாம் விண்ணரசு அடைய வேண்டுமானால் எமது மனம் சுத்தமாக இருக்க வேண்டும். இதற்கு யேசு கூறுகிறார்: பீடத்திலே காணிக்கை செலுத்தவரும் போது உன் சகோதரனோடு மனத்தாங்கல் இருந்தால், முதலில் போய் உன் சகோதரனோடு சமாதானம் செய்துகொள், பின்னர் உன் காணிக்கையை செலுத்து.

மோ. தார்சிசியஸ்

# லிபியாவை எந்நேரத்திலும் அமெரிக்கா தாக்கலாம்

(திரிப்பொலி)

லிபியாமீது எந்நேரத்திலும் அமெரிக்கா விமானத் தாக்குதலை நடத்தலாம் என செய்திகள் தெரிவிக்கின்றன.

லிபியாவிடம் பயங்கரமான போர் ஆயுதங்கள் இருப்பதைக் காரணம் காட்டியே அமெரிக்கா லிபியா மீது எந்நேரமும் பெரும் எடுப்பில் விமானத் தாக்குதல் மேற்கொள்ளுமென அமெரிக்கத் தரப்புச் செய்திகள் கூறுகின்றன.

லிபியாவில் எந்நேரமும் தாக்குதல் ஆரம்பமாகலாமெனவும் வெளிநாட்டவர்களை உடனடியாக வெளியேறுமாறும் அமெரிக்கா எச்சரிக்கை விடுத்திருப்பதாக ஏஜென்ஸி செய்திகள் நேற்றிரவு தெரிவித்தன,

லிபியா மீது தாக்குதல் நடைபெறுமானல் அமெரிக்கா மோசமான விளைவுகளை எதிர்நோக்கவேண்டி வருமெனவும் அமெரிக்கா எங்கும் லிபியத் தற்கொலைப் படையினர் தாக்குதல் நடத்துவார்கள் எனவும் லிபிய அதிபர் கேர்ணல் கடாபி எச்சரித்துள்ளார். (சி)

## மன்னார் தீவிற்குள் செல்லும் பயணிகள் கவனத்திற்கு

[யாழ்ப்பாணம்]

மன்னார் தீவிற்குள் கடமையாற்றும் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஊழியர்கள், அவர்கள் அங்குவேலை செய்வதனை உறுதிப்படுத்தி பிரிவு அரசியல் நிர்வாகப் பொறுப்பாளரின் கடிதத்துடன்சென்று மன்னார்த் தீவிற்குள் செல்வதற்கான பிரத்தியேகமாக உள்ள விண்ணப்பப்படிவத்தை மடு. விடத்தல்தீவு ஆகிய அவசர அனுமதி வழங்கும் காரியாலயங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

வடபகுதிக்குவெளியே செல்வதற்கான விண்ணப்பப்படிவம் மன்னார்த்தீவுக்குள் செல்வதற்கு ஏற்று கொள்ளப்படமாட்டாது என போக்குவரத்துக்கண்காணிப்பு பிரிவு அறியத்தருகின்றது

## இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் பொதுமக்களிடையே போசாக்கு நிலையில் ஏற்பட்டுள்ள குறைபாட்டை கருத்தில் கொண்டு வைத்திய நிபுணர்கள் கருத்தரங்கொன்றை இன்று பிற்பகல் 2 மணிக்கு யாழ். வை. எம். சி. ஏ. மண்டபத்தில் நடாத்துகின்றார்கள்.

இக்கருத்தரங்கில் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும் மற்றும்பொது அமைப்புகளின் பிரமுகர்களும் கலந்து கொள்கின்றார்கள். (வி)

## வேளாண்மை செய்கைப்போட்டி

(யாழ்ப்பாணம்)

தமிழீழ ஆய்வு நிறுவனம் யாழ் மாவட்டத்தில் நடத்திய வதிவிட வேளாண்மை செய்கைப் போட்டி முடிவுகளும் பரிசு பெறுபவர் விபரமும் நாளை வெளிவரும்.

**தெரிவுக்குழுவின்**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டால் அதன் பின்விளைவுகள் பிரச்சனையை மேலும் சிக்கலாக்கலாம்,

தெரிவுக் குழுவின் முடிவை புலிகளுக்கு தெவித்து அவர்களின் கருத்துகளையும், அபிலாஷைகளையும் இதில் சேர்த்து பின்னர் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படுமானல் அது பிரச்னையை தீர்க்க ஏதுவாகுமெனவும் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (சி)

**புலிகளுடன் பேசுவது**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சர் ஷேரத் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:

பிரபாகரனை சரணடையுமாறு சென்னை விசேட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இந்த நிலையில் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்துவது தொடர்பாக தனது நிலைப்பாட்டை இலங்கை அரசாங்கம் இன்னமும் பகிரங்கப்படுத்தவில்லை. இதுதொடர்பாக இந்தியாவில் உள்ள இலங்கைத் தூதுவர் நெவில் கனகரத்ன தெரிவித்தகருத்துஅவரதுசொந்தக் கருத்தாகும். அது அரசின் கருத்தல்ல என்றார். (கே)

**தமிழ் அகதிகளை**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

த்திவரும் இவ்வேளையில் அப்பகுதிகளுக்கு அகதிகளைஅனுப்புவது நியாயமாகாது.

இலங்கையில் அகதிகள் திரும்பிச்சென்று வாழ்வதற்கு ஏற்ற உரிய சூழ்நிலையை ஏற்படுத்துவது அவசியம். அதுவரையில் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்பக்கூடாதென்றும் கூறினார். (சி)

## போக்குவரத்து அனுமதி புதுப்பித்தல்

(யாழ்ப்பாணம்)

மோசடிகளைத் தவிர்க்கு நோக்குடன் வடபகுதிக்குள்ளே நுழையும் பயணிகள் அனுமதி அட்டையில் குறிப்பிட்டுள்ள திகதியிலிருந்து பதினைந்து நாட்களுக்குள் மீளவும் வடபகுதியை விட்டுவெளியே செல்வதாயின் மட்டும் செல்லுபடியாகும்.

ஏனையோர் சாதாரண நடைமுறையில் உள்ளது போன்று அனுமதியைப் பெற்றுக்கொளளலாம். 20-03-92 தொடக்கம் இது நடைமுறைக்கு வருகின்றது என போக்குவரத்து கண்காணிப்பு பிரிவு அறியத்தருகின்றது.

## கடிதங்களை உடன் சேர்ப்பிக்கவும்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறைத் துறைமுகத்துக்கு இன்று வரும் ''குமாரி'' கப்பலில் 42தபால் பொதிகள் வருகின்றன,

இதேநேரம் மேற்படி துறைமுகத்திலிருந்து நாளை சனிக்கிழமை புறப்படவிருக்கும் கப்பலில் இங்குள்ள தபால்கள் அனுப்பப்பட இருப்பதனல் இன்று பிற்பகலுக்கு முன் பொதுமக்கள் தமது கடிதங்களை யாழ். மத்திய தபால் நிலையத்தில் சேர்க்கும்படி கேட்கப்படுகிறார்கள், (வி)

**விமான இரைச்சலே**

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

விஜிதா தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; தென்பகுதி கடலில் 34,000 அடி உயரந்தில் 'எவ்-7' யுத்த விமானம் பயிற்சியில் ஈடுபட்டபோதே இச்சத்தம் கேட்டது. பலமைல் தூரத்திற்கு அப்பால்வரை இதன் அதிர்வை உணரமுடிந்ததாகவும், இலங்கையில் இவ்வாறு பெரும் இரைச்சல் ஏற்பட்டது இதுவே முதல் தடவை என்றும் அவர் தெரிவித்தார். (சி)

## பாரத 'ரத்ன'வை ஏற்க 'சுபாஸ்' உறவினர் மறுப்பு

(புதுடில்லி)

இந்தியாவின் அதி உயர் விருதான 'பாரதரத்ன' விருதை ஏற்றுக்கொள்ள விடுதலைப்போராட்ட வீரர் சுபாஸ் சந்திரபோஸின் மிக நெருங்கிய உறவினர்கள் மறுத்துள்ளனர்.

தக்கநேரத்தில் கௌரவிக்காது 45 வருடங்களின்பின் அவருக்கு இவ்விருது வழங்கப்படுவது நியாயமற்ற ஒரு செயல் என்றும் அவரது உறவினர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை சுபாஸ் சந்திரபோஸ் இறந்துவிட்டாரா என்ற கேள்விக்குறியும் தற்போது எழுந்துள்ளதாம். (சி)

**பிரபா ஒரு மாய மனிதன்**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:-

''பிரபாகரன் எங்கிருக்கிறார் எங்கு, எப்போது செல்வார் என்பன யாருக்கும் தெரிவதில்லை அவரைப் பிடிப்பதில் பல சிரமங்கள் இருக்கின்றன'' என்றார்.

## ஷெல் தாக்குதலால் மக்கள் இடம்பெயர்வு

(யாழ்ப்பகணம்)

அராலிப் பகுதியில் இரவு நேரங்களில் அடிக்கடி ஒரே பகுதியில் ஷெல் குண்டுகள் வீழ்ந்து வெடிப்பதினல் அப்பகுதிகளிலிருந்து 150க்கும் மேற்பட்ட குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன.

இப்பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்த குடும்பங்கள் தற்போது நவாலி அமெரிக்கன் மிஷன் பாடசாலையில் தங்கியுள்ளனர்.

இதேவேளை ஆவரங்கால் பகுதியிலுள்ள அகதி முகாமில் ஏற்பட்ட தீவிபத்தினல் பாதிப்படைந்த 48 குடும்பங்களையும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் பராமரித்து வருவதாகவும் கூறப்படுகின்றது. (வி)

## 500 அகதிகள் இன்று வருவர்

(மன்னார்)

தமிழகத்திலிருந்து மேலும் 500 அகதிகள் இன்று தலைமன்னார் வரவுள்ளனர்.

இதேவேளை அடுத்த வார முற்பகுதியில் மேலும் 1000 அகதிகள் திருகோணமலைக்கு வரவிருக்கிறார்கள்.

## இருதமிழர் கனடாவில் கைது

(ஒட்டாவா)

கனேடிய போலிக் கடவுச் சீட்டுக்களைத் தயாரித்து அகதிகளுக்கு விற்பனை செய்துவந்த இரு இலங்கைத் தமிழர்களைக் கனேடியப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

ஒவ்வொன்றும் 15 ஆயிரம் கனேடிய டொலருக்கு விற்பனை செய்துவந்தனர் என்றும் தெரியவந்துள்ளது.

கனடாவில் இத்தகைய போலிக் கடவுச்சீட்டுக்களைத் தயாரிப்பது மிகவும் அபூர்வம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்ட இவ்விருவர் மீதும் 10 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன, (கே)

### உலக கிண்ண கிரிக்கெட்

## அரையிறுதியாட்ட தகுதியை இந்தியா இழந்தது

(மெல்போன்)

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியின் அரை இறுதி ஆட்டத்தில் விளையாடும் வாய்ப்பை இந்திய அணி இழந்துவிட்டது. நியூசிலாந்து தொடர்ந்து ஆருவது வெற்றியைப் பெற்றது. மற்றொரு போட்டியில் இங்கிலாந்து வெற்றிபெற்றது.

நேற்று நியூசிலாந்து அணிக்கு எதிராக நடைபெற்ற போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 50 ஓவர்களில் ஆறு விக்கெட் இழப்புக்கு 230 ஓட்டங்களைப்பெற்றது. ரென்டுல்கர்-84, அஸாருதீன்-55)

நியூசிலாந்து அணி 46.1 ஓவரில் ஆறு விக்கட் இழப்புக்கு 231 ஓட்டங்கள் பெற்று வெற்றி பெற்றது. (கிறேபச்-74 ஓட்டம்)

இங்கிலாந்துக்கும் தென்னுபிரிக்காவுக்குமிடையிலான போட்டியில் இங்கிலாந்து 3 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது: ஸ்கோர் விபரம்: தெ. ஆபிரிக்கா 50 ஓவரில் 236 ஓட்டம். மழை காரணமாகப் போட்டி 41 ஓவரில் 226 ஓட்டம் என நிர்ணயிக்கப்பட்டது, இங்கிலாந்து 40.5 ஓவரில் 7 விக்கெட் இழந்து 227 ஓட்டங்களைப் பெறறது.

**கொழும்பு வெரகறவில்**

(1-ம பக்கத் தொடர்ச்சி)

இச்சம்பவம் தொடர்பாக தற்போது பெரும் குழப்பநிலை ஏற்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (மா)

**இலங்கைக்கு**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளப்பட்டு வருகிறதாம்.

இதற்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இலங்கைத் தூதரகங்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. (சி)

**பேசாலை**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

இம்முகாமில் கைது செய்யப்பட்டவர்களில் விசாரணையின் பின் ஏழுபேர் விடுதலை செய்யப்பட்டதுடன் ஏனைய இருவரும் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன் இவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

**மேலதிக படையினர்**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பு தலைமையகத்தில் கூடி நகரின் பாதுகாப்பு நிலைமை பற்றி ஆராய்ந்தது.

பாதுகாப்பு நிலையை ஸ்திரப்படுத்துவதற்காக கொழும்பிலும் அதன் சுற்றுப்புறத்திலுமுள்ள பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளுக்கு சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (சி)

## அறிவித்தல்

வடபிராந்திய வர்த்தக ஊழியர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் 14-3-92 சனிக்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு கொட்டடி நமசிவாயவித்தியாலயத்தில் நடைபெறும். அங்கத்தவர்கள் தவருது கலந்து கொள்ளவும். அங்கத்தவர்கள் காட் பெருதவர்கள் அலுவலகத்திற்கு வந்து பெற்றுக்கொள்ளவும்.

செயலாளர்.

(சி-6056)

## மரண அறிவித்தல்

### திரு. பொன்னுத்துரை ஐயர்

தொண்டமானறு செல்வச்சந்நிதி ஆலய குருக்கள் திரு. பொன்னுத்துரை ஐயர் காலமாகிவிட்டார். ஈமக் கிரியைகள் இன்று (13-03-92) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறும்.

தகவல்:
எஸ். செல்வேந்திரா

(சி-6058)

### ஆறுமுகம் சுப்பிரமணியம்

காரைநகர் களபூமி பொன்னுவளையை பிறப்பிடமாகக்கொண்டவரும் தற்போது ஓட்டுமடத்தில் வசிப்பவருமான ஆறுமுகம் சுப்பிரமணியம் 12-3-92ல் சிவபதமடைந்துவிட்டார். இவர் செல்வரத்தினத்தின் தந்தையும், சுந்தரம்மா, பாக்கியம், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம், செல்லம்மா, கந்தையா, சிதம்பரம் ஆகியோரின் சகோதரருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 13-3-92 வெள்ளிக்கிழமை காலை 11மணிக்கு ஓட்டுமடத்திலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்களும் ஏற்றுக் கொள்ளும்படி தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: சகோதரர்கள்

(சி-6057)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு மார்ச் மாதம் 13-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registred as a News Paper at the General Post office Sri Lanka under Licence Number B/10336/81.